

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையின்படி திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 10 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்களின் திறப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தில் பள்ளி மாணாக்கர்களுக்கு மூக்கு கண்ணாடியினை வழங்கினார். நிகழ்வில் திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, சூரியம்பாளையத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2000 நூல்களைக் கொண்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர்எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார். கலைஞர் நூலகம் திறப்பு விழா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடி ராஜா, ஜெகதீஸ்குமார், முரளி, கார்த்திகேயன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் அ.சீனிவாசன், ஒன்றிய கழக செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், கு.பழனிவேல், கே.செல்வராஜ், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், கே.கே.சண்முகம், நகர கழக செயலாளர்கள் டி.விஜயகண்ணன், எஸ்.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.ரமேஷ்பாபு, முருகன், மாவட்ட கழக அவைத்தலைவர் இரா.நடனசபாபதி, துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே.மயில்சாமி, எம்.சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஓ.ஆர்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், எம்.இந்திராணி மயில்சாமி, நகர வார்டு கழக செயலாளர்கள் எஸ்.வி.இராஜேந்திரன், கார்த்திக், நகர்மன்ற உறுப்பினர் ரமேஷ், மாதேஸ்வரன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் முருகையன், தியாகராஜன், ரமேஷ், சாதிக்பாட்ஷா, கருணாகரன், குமார், கௌதம், ஆர்.வி..ஆர்.சரவணன், ஷேக் தாவுத், ராஜவேலு, ராஜவேல், பரசுராமன், கௌதம், சுரேஷ், ராஜ், நந்தகுமார், வேல்முருகன், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், திராவிடர் கழக பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, நவ.26-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை வருமாறு:-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் நாளை (27.11.2024 - புதன்கிழமை) ஆகும். தமிழ் சமுதாயம் தமிழ் மொழி என்கிற உணர்வு பெற்றிட உழைத்த தந்தை பெரியார், பேறறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களையும் உள்ளத்தில் ஏந்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழியில் ஓய்வின்றி பணியாற்றி வரும் இளம் தலைவர், தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மிகுந்த எழுச்சியோடு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், விளையாட்டு போட்டிகளை நடத்துதல், இரு வண்ணக் கொடியினை உயர்த்தி வைத்து இனிப்புகள் வழங்குதல் என புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபட வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வட்டங்கள், வார்டுகள் தோறும் மேற்கண்ட நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

# துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடுவோம்!

## மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



மயிலாடுதுறை, நவ.26-

மயிலாடுதுறை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஒற்றை செங்கலால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நாளை (27.11.2024) மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும்,

மாவட்டத்தில் 10 இடங்களில் மருத்துவ முகம், 10 இடங்களில் இரத்ததான முகாம், 5 இடங்களில் இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தி சின்னவர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும்

பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள்,சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் விழா ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாககிள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

### நாகை மாவட்டத்தில்

# துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடுவோம்!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, நவ.26 -

நாகை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஒற்றை செங்கலால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நாளை (27.11.2024) நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழகக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும்,

ஏழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும்,

மருத்துவ முகம், இரத்ததான முகாம், இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தி சின்னவர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும்

விழா ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.



துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அரூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. கழக சார்பில் ஒன்றியக் கழகச் செயலாளர் கோ.சந்திரமோகன் தலைமையில், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வீரப்பநாயக்கன்பட்டி ஊராட்சி கூடலூரில் கழகக் கொடி ஏற்றி வைத்து,கோட்டப்பட்டியில் உள்ள பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் கிருஷ்ணகுமார், பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி, அவைத்தலைவர் ஜெய்னுலாப்தீன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# நவ.27 முதல் டிசம்பர் மாதம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை!

திண்டிவனம், நவ. 26-

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்







ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, மாத்தூர் மாதா கோவில் பகுதியில் பேருந்து நிறுத்தம் அமைத்து தரவேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 22.11.2024 வெள்ளிக்கிழமை முதல் புதிய பேருந்து நிறுத்தத்தினை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்தார். நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக அந்தியூர் கிளை மேலாளர் ரமேஷ் அம்மாபேட்டை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சரவணன், ஒன்றிய கழக அவைத் தலைவர் எ.ஆர். எஸ்.சுப்பிரமணியம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அவர்களின் 48-வது பிறந்த நாள் விழா நவம்பர் 27ஆம் தேதி மிக சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட இருக்கிறது இதை அடுத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும் எனவும், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி கிளைகள், நகராட்சி வார்டுகள், பேரூராட்சி வார்டுகள் தோறும் நாளை (நவம்பர் 27ஆம் தேதி) முதல் தொடங்கி டிசம்பர் மாதம் முழுவதும் கழகக் கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா புத்தகங்கள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,ரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்தும், மரக்கன்றுகளை வழங்கி மரக்கன்றுகள் நட்டுவைத்தும் ஆதரவற்றோர், முதியோர், இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கியும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சீரும் சிறப்புமாக கொண்டாட வேண்டும்.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் அனைவரும்கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சங்கராபுரம் அ.ஆசிம்
## நவம்பர் 26 (2019)



**இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேரூர்ச் செயலாளராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1966, 86 ஆகிய இரண்டு முறை சங்கராபுரம் பேரூராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**